# கிரீன்வுட் தொடக்கப்பள்ளி

மின்னேடு 2



## கிரீன்வுட் தொடக்கப்பள்ளியில் முழுமை தற்காப்புத் தினம்

கிரீன்வுட் தொடக்கப்பள்ளி மாணவர்கள் பிப்ரவரி மாதம் முழுவதும் முழுமைத் தற்காப்புத் தினத்தை ஒட்டிப் பல நடவடிக்கைகளில் குதூகலமாய் ஈடுபட்டிருந்தனர். ஒன்றிணைந்து சிங்கப்பூரை வலிமையுடன் காப்போம் என்ற கருப்பொருளை உணர்த்தும் வண்ணம் நடவடிக்கைகள் அமைக்கப்பட்டன. சிங்கப்பூர்க் காவல் துறையினர் அவசர உதவி கோருவோரை எவ்வாறு குறுகிய நேரத்திற்குள் சென்றடைகின்றனர் என்பதை மாணவர்கள் புரிந்துகொள்ள கண்காட்சி ஒன்றினை கிரீன்வுட் தொடக்கப்பள்ளியில் நடத்தினர். அதில் எவ்வாறு காயமடைந்தவர்களுக்கு முதலுதவி செய்யலாம் என்பதும் காட்டப்பட்டது.







வகுப்பறைகளில் மாணவர்கள் அவர்கள் சமூகப் பொறுப்புடன் புரிந்த ஒரு செயலைப்பற்றித் தங்கள் சக மாணவர்களுடன் கலந்துரையாடினர். மாணவர்களிடத்தில் சமூகப் பொறுப்புணர்வை வளர்க்க இந்த நடவடிக்கை பெரும் துணையாக அமைந்தது. சிங்கப்பூரைத் தற்காப்பதில் மாணவர்களுக்கும் ஒரு முக்கிய பங்கு உண்டு என்பதை முழுமைத் தற்காப்புத் தினம் நடவடிக்கைகளின் வழி உணர்ந்தனர்.







அதர்வா (5 RY) & டெக்க்ஷீனா (5 RE)

# எண்ணப் பிரதிபலிப்பு

## நம் நாட்டை நம்மால் தற்காக்க முடியாவிட்டால், என்ன நேரிடும் என்று நினைக்கிறாய்?

நம் நாட்டை நம்மால் தற்காக்க முடியாவிட்டால், மற்ற நாடுகள் நம்மீது போர் தொடுக்கலாம். அதில் அவர்கள் வெற்றிக் கண்டால், நம் நாட்டு மக்கள் பல வழிகளில் அவதியுறுவர். போதுமான உணவு, மருந்து, படிப்பு போன்ற அத்தியாவச தேவைகளைக்கூட நம்மால் பெறமுடியாமல் போகும். உள்நாட்டுப் பூசல்கள் வெடிக்கலாம், திருட்டு அதிகரிக்கும், மக்கள் வேலை வாய்ப்புகளின்றித் துன்புறுவார்கள்.

## முழுமைத் தற்காப்புத் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட நடவடிக்கைகளில் உன்னைக் கவர்ந்தது எது?

அவசர உதவி கோருவோரை எவ்வாறு காவலர்கள் குறுகிய நேரத்திற்குள் சென்றடைந்து அவர்களுக்குத் தக்க நேரத்தில் உதவுகின்றனர் என்பதை அவர்கள் நடத்திய கண்காட்சிவழி அறிந்துகொண்டேன். இது நமது சிங்கப்பூர் காவல் துறை எவ்வளவு துரிதமாகத் தங்கள் பணியைச் செய்து வருகின்றனர் என்பதை எனக்கு உணர்த்தியது. அதனால், இந்த நடவடிக்கை என்னை மிகவும் கவர்ந்தது.

## ஒரு மாணவராக, நீ சிங்கப்பூரைத் தற்காக்க என்ன செய்யலாம்?

அவசரக் காலங்களில் செய்யவேண்டியவற்றை நன்கு அறிந்துகொள்வேன். மேலும், குடிமைத் தற்காப்பு ஏற்பாடு செய்யும் அவசரக் காலப் பாவனைப்பயிற்சிகளில் நான் ஆர்வத்துடன் பங்கேற்பேன். அதோடு, மற்றவர்களுக்கு முதலுதவி செய்யக் கற்றுக்கொள்ளவேன்.




மயுக்கா (5 RE)    விக்காஸ் (5 RY)